1972 டிசம்பர் 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குத்தகை பாதுகாப்புச் சட்டத்திலேயே அப்படிப்பட்ட பாதுகாப்பு எல்லாம் கொடுக்கிற விதிகள் இருக்கின்றன. ஒருவர் இறந்துவிட்டால் அந்த நிலத்திலே அவர் உழைப்பைக் கொடுத்திருக்கிற அந்த நிலத்திலே அவருடைய குடும்பத்தாருக்குத்தான் உரிமை கொடுக்க வேண்டுமென்ற பாது காப்பு ஏற்கனவே இருக்கிறது. மேற்கொண்டு அவசியம் ஏற்பட்டால் கொண்டுவரலாம், இப்பொழுது தேவையில்லை என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங் கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 45/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

1899-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் 64-வது பிரிவின்படி நீதிபதியானவர் அப்பிரிவினில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கு ரூ. 5,000 வரையில் அபராதம் விதிக்க வழிவகை உள்ளது. இக்குற்றங்களின் மூலம் ஒரு பத்திரத்தில் அரசினரால்

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

இழக்கப்படும் முத்திரைக் கட்டணத் தீர்வையை வசூலிப்பதற்கு அச் சட்டத்தினில் வழிவகை எதுவும் இல்லை. எனவே, இக்குற்றங்களின் மூலம் அரசினரால் இழக்கப்படும் முத்திரைக் கட்டணத் தீர்வையை நீதிபதியானவர் Magistrate பிரிவு 64-ன்கீழ் விதிக்கப்படும் அபராதத்துடன் சேர்த்து வசூலிப்பதற்கு வகை செய்யும் வழியில் புதிய 64-ஏ பிரிவை அச்சட்டத்தினில் சேர்த்துக் கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

இச்சட்டமுன்வடிவை இப்பேரவை ஏற்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவரவர்களே, ஏற்கனவே யாராவது சொத்து வாங்கி சொத்து மதிப்பைக் குறைவாகக் கொடுத்தால் நீதிபதி 5,000 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம் என்றிருக்கிறது. ஆனால் அரசாங் கத்திற்கு நியாயமாக வர வேண்டிய கட்டணத்தை வசூலிப்பதற்கு வழிவகை இல்லை. எனவே, இனிமேல் நியாயமாக வர வேண்டிய கட்டணத்தையும் வசூலிக்க வேண்டுமென்பதற்காக, வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடுவதற்காக இந்தச் சட்டம். எனவே, இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) நிறைவேற்றப் பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.